காரியாப்பட்டி கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்.

*369வினு— திரு. க. சுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் இதுவரை கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டம், காரியாப்பட்டி ஒன்றியப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் யாவை ?

(இ) அவற்றிற்குச் செலவிடப்பட்ட தொகைகளின் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) அண்டு (இ) : காரியாப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 1974-75ம் ஆண்டில் கிராமப்புற வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்தின்கீழ், மல்லாங்கிணறு கிராமத்தில் ரெங்கய்யா ஊரணியை ஆழப்படுத்தும் வேலை மேற்கொள்ளப்பட்டு, ரூபாய் 2,671 செலவில் முடிக்கப்பட்டது.

New Municipal Corporation.

*370 Q.—Thiru T. GANAPATHY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to form a Municipal Corporation comprising the Municipalities of Tirunelveli, Palayamkottai and Melapalayam ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) அண்டு (இ) : திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகராட்சிகளை இணைத்து ஒரு மாநகராட்சி அமைக்கலாம் என்று அம்மூன்று நகர மன்றங்களும் தீர்மானித்தால், அதை மேற்கொண்டு அரசு பரிசீலிக்க முடிவு செய்துள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த மூன்று நகர மன்றங்களும் பல அம்சங்களில் வேறுபட்டிருக்கின்றன. வளர்ச்சி அடைந்திருக்கிற தன்மையிலும், ஜனத்தொகையின் தன்மையிலும் வேறுபாடு கொண்டவைகளாக அமைந்துள்ளன. ஆகவே, இவைகளை ஒன்றாக இணைப்பதில் பல சிக்கல்கள் ஏற்படும் என்று அங்கே இருக்கிற மக்கள் கருதுவதால் அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்தபின்னுல் இம்மாதிரி இணைப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, எந்த நகர மன்றத்தை வேறு எந்த நகர மன்றத்தோடு சேர்ப்பதாக இருந்தாலும், அந்தந்த நகர மன்றங்கள் சேர்ப்பதற்கு ஒப்புதல் தந்தால்தான் பரிசீலனை செய்ய முடியும். இல்லாவிட்டால் முடியாது. இதைப்போல

1975 மார்ச் 18]

திருநெல்வேலியில் கண்டியாப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கருத்து கேட்கப்பட்டபோது அவர்கள் முடியாது என்று எழுதி அனுப்பிவிட்டார்கள். மீண்டும் இதை மாநகராட்சி ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை இருப்பதால் மேலப்பாளையம் நகராட்சி அதற்கு ஒப்புக்கொண்டால் பரிசீலிக்கலாம் என்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. வி. ஆலடி அருணு : தலைவரவர்களே, இந்த மூன்று நகர மன்றங்களையும் இணைத்து மாநகராட்சியாக ஆக்குவதற்கு இதுவரை சம்பந்தப்பட்ட நகர மன்றங்களில் எந்தெந்த நகராட்சிகள் தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கின்றன? அனுப்பி இருந்தால் எப்போது அனுப்பி வைக்கப்பட்டது? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மாநகராட்சியாக்குவதற்கு பாளையங்கோட்டை நகராட்சி மட்டும் தீர்மானம் போட்டிருக்கிறது. மேலப்பாளையம் இன்னும் தீர்மானம் எதுவும் அனுப்பவில்லை. அதனால் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

புதிய உயர்நிலைப் பள்ளிகள்.

*358 வினு—திரு. வி. ஆலடி அருணு : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974–75 கல்வி ஆண்டில் புதிதாக உயர்நிலைப்பள்ளிகள் திறக்க வேண்டி, பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அவற்றுள் அரசு அனுமதித்தவை எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 105.

(இ) 57.

திரு. வி. ஆலடி அருணு : தலைவரவர்களே, புதிதாக உயர்நிலைப்பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு வந்த விண்ணப்பங்களில் 50-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டதற்கு என்ன காரணம்? ஒரு குறிப்பிட்ட தகுதியுள்ள கிராமத்திற்கு, இவ்வளவு எண்ணிக்கை கொண்ட மக்கள் தொகை இருக்கிற கிராமத்திற்கு ஒரு உயர்நிலைப்பள்ளி தொடங்க வேண்டுமென்று திட்டம் வகுத்து, நாடெங்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உயர்நிலைப் பள்ளிகளைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 40 உயர்நிலைப் பள்ளிகள் துவக்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தோம். அதன்படி ஆங்காங்கேயிருந்து வருகின்ற மனுக்களை பரிசீலித்து 57 பள்ளிகளுக்கு இடம் அளித்தோம். பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. 5 ஏக்கர் நிலப்பரப்பு இடம்—புறம்போக்கு இடமோ அல்லது தனியார் கொடுக்க முன்வந்தால் அந்த இடமோ—தேவை. ரூ. 10 ஆயிரம் கல்வி நிதி என்று முன்பணமும், ரூ. 12,500 முன் பணமும் கொடுக்க முன்வரவேண்டும். பக்கத்தில் 5 மைல் சுற்றளவுக்கு